# சைவ
# திருமண முறைகள்



புத்தொளி

அன்பளிப்பு
புத்தொளி


நூல்— சைவத் திருமண முறைகள்

ஆசிரியர் — புத்தொளி

முதற்பதிப்பு — தை 1994

அச்சுப் பதிவு- திருச்செல்வி அச்சகம்
யாழ்ப்பாணம்.



பதிப்புரிமை— ஆசிரியருக்கு


திருநிறை செல்வன்
சுப்பிரமணியம் அம்பிகைபாகனுக்கும்
எனது புதல்வி
திருநிறை செல்வி
சித்திராதேவிக்கும்,
ஆனைக்கோட்டை மூத்தநாயனார்
கோவிலில் 29 – 1 – 94 சனிக்கிழமை
காலை 7-36 — 9- 30ற்கு மிடை
யிலுள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெற்ற
திருமணத்தன்று - திருமண நினைவாக
இந்நூல் வெளியிடப்படுகின்றது.

செல்வ அகம், ந. சிவபாதம்
ஆனைக்கோட்டை. புத்தொளி

# என்னுரை

நான் படித்துத் தெரிந்தவற்றை மற்றையோருடன் பகிர்ந்துகொள்ளும் பழக்கம் கடந்த நாற்பதாண்டுகளாக என்னிடம் உண்டு இதுவரை பதினெட்டு நூல்களை எழுதி வெளியிட்டதுடன் இன்றும் படித்துச் சுவைத்தவற்றைப் பத்திரிகைகளுக்கு எழுதி வருகிறேன்.

எனது புதல்வி சித்திராதேவியின் திருமணம் நடைபெறும்போது சைவத் திருமண முறைகளை அறிய வேண்டுமென்ற ஆவலில் இந்நூலை வெளியிடுகிறேன்.

எனது புதல்வன் செல்வன் சிவஞானச்செல்வன் நினைவாக 'பாலர் பாடல்கள்' (ஈழத்துக் கவிஞர்களின் பாலர் பாடல் தொகுப்பு) 13-7-80ல் வெளிவந்தது. எனது புதல்வி சித்திராதேவி செல்வன் சுப்பிரமணியம் அம்பிகை பாகன் திருமணம் நடைபெறும் இன்று இந்நூல் வெளி வருகின்றது. இவை இரண்டும் ஈழத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குஅன்பளிப்பு நூல்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மணமக்களை வாழ்த்திக் கவிதைகள், வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய அனைவருக்கும் எனது நன்றி என்றும் உரியது. இந் நூலை நான் படித்துக்காட்டியபோது பல திருத்தங்களைச் செய்து அணிந்துரையும் அன்புடன் அளித்த பெருமதிப்பிற்குரிய எனது ஆசிரியரும் வடமொழிப் பண்டிதருமான பிரம்மஸ்ரீ ச. பஞ்சாட்சரசர்மாவுக்கும், குறுகிய காலத்தில் அழகுற அச்சிட்டு உதவிய திருச்செல்வி அச்சக உரிமையாளர் மா. கந்தசாமிக்கும் எனது இதயம் கனிந்த, நிறைந்த, நன்றிகள்.

'செல்வ அகம்'
ஆனைக்கோட்டை. 29-1-94 புத்தொளி

# அணிந்துரை

சைவத் திருமண முறைகள் உயர்ந்த கருத்துக்களை உள்ளடக்கியவை. பெரும்பான்மையோர் அவற்றை விளங்காமலே பரம்பரை வழக்கத்தைப் பின்பற்றித் திருமணங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். செய்கின்ற செயல்களை நன்கு விளங்கிக்கொண்டு செய்வது அச்செயலின் முழுப்பயனையும் பெறுவதற்கு வழியாகும்.

இவ்வகையில் எனது மாணவரும், ஆசிரியரும், எழுத்தாளருமான புத்தொளி ந. சிவபாதம் அவர்கள் தம் செல்வப் புதல்வியின் திருமண விழாவின்போது சைவ சமயத்தவரின் திருமண முறைகள் என்னும் இவ் அரிய விளக்க நூலினை அன்பளிப்பாக வெளியிடுவது ஒரு முன்னோடி முயற்சியாகும். திருமணத்துக்கு வந்தவர்களுக்கு சந்தண தாம்பூலமும் கற்கண்டும் வழங்கி வரவேற்பது போல இவ் அன்பளிப்பும் விருந்தினரை மகிழ்விப்பதோடு அவர்களது அறிவுக்கும் விருந்தளிப்பதாகும்.

புத்தொளியின் முயற்சி வெல்க.

கோப்பாய், — ச. பஞ்சாட்சரசர்மா
20-1-94

* * *

# கவி மலர் மாலை

புத்தொளியின் பொன்மகளாய்ப் பூத்த புதுமலராம்
சித்திரா பாகமுறச் சேர்ந்தணைந்தான் – உத்தமனாம்
அம்பிகை பாகன் குமரன் அன்னையருட் சத்தியுடன்
எம்பெருமான் சேர்ந்தான் என.

பண்டிதர் க. சச்சிதானந்தன்

★

சீர்பெருகு சைவத் திருநெறியும் செந்தமிழும்
பார்மீது நீடும் பான்மையென – ஆர்வமுடன்
சித்திரா தேவியொடு சீரம்பிகை பாகன்
இத்தரையில் வாழ்க இனிது.

ச. ப. சர்மா

★

புத்தொளியின் திருமகளாம் சித்திரா தேவியினைத்
தைத்திங்கள் நன்னாளிற் கரம்பற்றும் – உத்தமனாம்
அம்பிகை பாகனுக்கு அம்பிகையின் பாலகனே!
அள்ளிப் பொழிவாய் அருள்!!

'முருகு'

★

அம்பிகையைப் பாகங்கொண்டாண்டருள்செய் ஈசனருள்
நம்பித் துதிக்கின்றோம் நல்லோராம் – அம்பிகை
பாகனொடு சித்திரா தேவியாம் பாவையுமே
ஏகமாய் வாழ இனிது.

சொக்கன்

★

புத்தொளி பெற்ற புதல்வி புவியுவந்த
சித்திரா தேவித் திருக்கழுத்தில் – வித்தகனாம்
அம்பிகை பாகன் அணிந்தான் பொன்மாங்கல்யம்
தும்பிக் கையானைத் துதித்து.

க. உமாமகேஸ்வரன்

# மணமக்களை வாழ்த்துகிறார்கள்

திருமணம் என்பது ஒரு பந்தம். கன்னியும் கட்டிளம் காளையும் களிப்புடன் எதிர் நோக்கும் ஒரு நன்நாள் இதுவாகும். திருமணம் ஆண் பெண் இருவரையும் காலம் காலமாகப் பிணைந்து வாழ அர்த்தங்கள் நிறைந்த, கருத்தாளமுள்ள வாழ்த்துக்களுடன் நிறைவுபெறும் அரியதொரு நிகழ்ச்சியாகும். திருமணம் சர்வதேச வர்த்தமானங்களுக்கமைய தேசத்துக்குத் தேசம் மாறுபடும் ஆனால் தமிழர்களுக்கு அவர்களது வாழ்விற்கு இது ஒரு புனிதமான நாள்.


அந்தணர் பெருமக்கள், அக்கினிப்பெருமான், ஆன்றோர் என்றழைத்து அவர்களுடைய நல்லிசிகளோடு நடத்தும் புனிதச் சடங்கு.

புத்தொளி ந. சிவபாதத்தின் நன்மகளாம் சித்திராதேவியின் கைத்தலம் பற்றும் அபிகை பாகன் சர்வமங்களமும் பெற்று நீடூழி வாழ எங்கள் இதயம் சேர்ந்த நல் வாழ்த்துக்கள்.

து. வைத்திலிங்கம்
பிரதேச செயலாளர்
மேலதிக அரசாங்க அதிபர்
சண்டிலிப்பாய்.

மணவாழ்கை என்பது தனி மனித வாழ்க்கை வளர்ச்சியில் ஒரு முக்கிய நிகழ்வாகும். தனிமையாக. தமது குடும்பச் சூழலில் வாழ்ந்த இருவர் தமக்கென ஒரு குடும்பத்தை ஏற்படுத்தும் ஒருநிகழ்வு ஆகும். அன்றிலிருந்து இக் குடும்பம் செயற்படத் தொடங்கும். அக்குடும்பத்தின் தனித்துவம், மணமக்களின் வாழ்வு பற்றிய நோக்கினால் தீர்மானிக்கப்படும். குடும்ப வாழ்வின் வெற்றி கணவன் மனைவியின் புரிந்துணர்வு, ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்ளும் பண்பு, தேவைக்கேற்ப விட்டுக் கொடுக்கும் ஆற்றல் ஆகியவற்றில் தங்கியுள்ளது எனலாம். அன்பர் புத்தொளியின் மகள் செல்வி சித்திராதேவியும் அவரைக் கைப்பிடிக்கும் சுப்பிரமணியம் அம்பிகைபாகனும் உதாரண குடும்பஸ்தர்களாக நிறைவுபெற வாழ்த்துகின்றேன்.

சுந்தரம் டிவகலாலா
(பிராந்திய உள்ளூராட்சி உதவி
ஆணையாளர்)



# சைவத் திருமண முறைகள்

திருமணம் — திரு வென்னுஞ் சொல் அழகு, செல்வம், செம்மை, சிறப்பு முதலிய பொருள் தருகின்றது, மணம் என்றால் நறுமணத்தைக் குறிக்கின்றது. மலரின்கண் மணம் வெளிப்படுவது போல மணமக்களின் மனத்தகத்து அன்பு மலரும் இத்தகைய சிறப்புணர்ந்தே தமிழ் மக்கள் அந் நிகழ்ச்சியைத் திருமணமென மனம் மகிழக் கூறினர்.

திருமணம் என்றால் என்ன என்று திருவள்ளுவர் தெளிவுபடுத்தியுள்ளார். திருமணம் ஒரு வாழ்க்கை நெறி என்றார்.

'மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு'

என்று எடுத்துக் காட்டியுள்ளார்:

ஒரு ஆண் ஒரு பெண்ணுடன் கூடி மகிழ்ந்திருப்பதற்காக மட்டும் தமிழர் திருமணம் நடைபெறவில்லை. இனிய இல்லறம் நடத்தி, நன்மக்களைப் பெற்று, சந்ததி விருத்தியாக்கி, இல்லறத்தை பாரம்பரியப் பெருமையாக்கி வளரச் செய்ய வேண்டும் இதுதான் சைவமக்களின் திருமண முறைகளின் நோக்கமாகும். சைவத் திருமணத்தில் ஒருவித மனமகிழ்ச்சி இருக்கிறது அத்துடன் அரிய கருத்துக்களும் இருக்கின்றன.

திருமணம் பற்றி இலக்கியங்கள் இயம்புகின்றன. இல்லற வாழ்க்கை இனிதாகப் பயன்மிக நடைபெறுவதற்குதிருமண முறை தக்கபடி அமைய வேண்டும்,

''காதன் மனையாளுங் காதலனு மாறின்றித் தீதில் ஒரு கருமஞ் செய்பவே'' என்ற வண்ணம் இல்வாழ்க்கையை நடத்தும் தலைவனும் தலைவியும் ஒருமைப்பாடுடையராய் நற் செய்கைகள் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் வாழ்ந்த நன்மக்கள் தலைவன் தலைவியரது உள்ளத்து ஒற்றுமையால் ஏற்பட்ட மண வாழ்க்கையினையே சிறந்ததெனக் கொண்டார்கள். இக் கருத்து அகப்பொருள் நூல்களில் வலியுறுத்தப் படுகின்றது. இறையனார் அகப்பொருள் உரை களவியலில் எட்டுவகை மணம் பற்றிக் கூறப்பட்டுள்ளது அவையாவன:

பிராமம்: பிரமச்சரியம் காத்தவனுக்கு தக்க வயதுடைய பெண்ணை வாழ்க்கைத் துணையாகக் கொடுப்பது.

பிரசா பத்தியம்: மணமகனிடமிருந்து எதையும் பெற்றுக் கொள்ளாமல் மணமகளை அலங்கரித்துக் கொடுத்தல்.

ஆரிடம்: மணமகனிடமிருந்து இருபசுக்களைப் பெற்றுக் கொண்டு மண மகளைக் கொடுத்தல்.

தெய்வம்: (தைவம்) யாகத்தில் கடமையாற்றும் ஒருவனுக்கு மணமகளைக் கொடுப்பது.

காந்தர்வம்: ஆணும் பெண்ணும் விரும்பினால் தாமே கூடும் கூட்டமென்று ஆரியத்துள் கூறப்பட்டது. இது தமிழரது ஐந்திணை ஒழுக்கத்தோடு சேர்ந்த தென்று கூறப்பட்டது.

ஆசுரம்: மணமகனிடம் பணம் வாங்கிக் கொண்டு திருமணஞ் செய்துகொடுப்பது.

இராக்கதம்: வீரச் செய்கை செய்தோனுக்கு ஒரு பெண்ணை மணஞ்செய்து கொடுப்பது. சுயம்வரம் என்னும் முறையும் இதனுள் அடங்கும்.

பைசாசம்: நித்திரையில் இருப்பவளைப் பலாத்காரமாகக் கொண்டு சென்று மணஞ் செய்வது.

வீட்டிலும், கோயிலிலும் திருமணங்கள் நடந்தன சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கும் சங்கிலிநாச்சியாருக்கும் திருக்கோயிலிலே திருமணம் நடைபெற்றது. திருஞான சம்பந்தப் பெருமானது திருமணமும் திருக்கோயிலிலேயே நடைபெற்றது.

சிலப்பதிகாரத்தில் கண்ணகி கோவலன் திருமணம் இக்கால முறைப்படி ஐயர் முன்னிலையில் நடந்தது.

மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட தீவலம் வந்து — கண்ணகியும் கோவலனும் திருமணம் செய்தார்கள் பெருமையில் திளைத்த பிராமணர் வேத விதியை உணர்த்த, அக்கினியை வலம் வந்து நடந்தது. இதனை இலக்கியங்கள் கற்பியல் என்று சொல்கின்றன. இதைவிட இன்னொரு திருமணமும் இலக்கியத்தில் சொல்லப்படுகிறது. அதுதான் காதலர் இருவர் கருத்தொருமித்து அவர்களே மாலை மாற்றிக் கொள்வது. சிலப்பதிகாரத்தில் மாலை மாற்றிக் கொள்ளும் திருமணமும் நடந்தது. அதுதான் கோவலன் - மாதவி திருமணம். மாதவியும் பண்பில் கற்பில் சாமான்யமானவளல்ல. கற்பில் சிறந்தவள் கண்ணகியா? மாதவியா? என்று பட்டிமன்றமே இன்று நடக்கிறது.

மணமகன், மணமகள் சாதகப் பொருத்தம் பார்க்கிறார்கள். சாதகப் பொருத்தம் என்பது உடல் சம்பந்தமாக குணவியல் சம்பந்தமாக ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொருத்தமிருக்கிறதா என்பதைப் பரிசோதித்துப் பார்க்கிறார்கள்.

கிரகங்களின் பாதிப்பு நம் குணத்திலும் உடலமைப்பிலும் உண்டு என்பது முன்னோர் கண்ட உண்மையாகும். இரண்டு சாதகங்களையும் பரிசோதித்தால் சரீர ஒற்றுமை—குண இயல் ஒற்றுமை தெளிவாகிவிடும்,

இவர்கள் இருவரும் இணைவதற்கு முன்னர் உறவினரிடமும், நண்பர்களிடமும் மேலும் விசாரித்தறிவார்கள். இதன் பின்னரே திருமண நிச்சயதார்த்தம் செய்வார்கள். உற்றார் உறவினர் ஊரிலுள்ள முக்கியஸ்த்தர்கள் என இந்த நிகழ்ச்சிக்கு அழைக்கப்படுவார்கள். அதன் பின்னர் திருமண நாள் நிச்சயிக்கப்படுகிறது. உற்றார், உறவினர் அனைவருக்கும் இது மகிழ்ச்சியான நாள். புத்தாடை உடுத்து அனைவரும் புத்தூக்கம் பெற்றவர்கள் போல் கூடி மகிழ்வார்கள்.

*கன்னிக்கால் நாட்டல்:*

கன்னியின் பாதுகாப்புப் பற்றிய வளமான வாழ்வுக்கு; எளிதில் வளர்ந்து விடக்கூடிய முருக்க மரத்தை உதாரணமாகக் கொள்ளப்படுகிறது.

*ஓமம் வளர்த்தல்:*

விக்கிரக வழிபாட்டிற்கு முந்தியது அக்கினியின் மூலம் இறைவனை வழிபடுதலாகும். திருமணத்தின்போது ஓமாக்கினியில், இறைவன் இறை

வியையும், நவக்கிரக தேவர்களையும் வழிபட்டு தேவர்கள் முன்னிலையில் திருமணத்துக்கு அக்கினியையும் ஒரு சாட்சியாகக் கொள்வது.

*கன்னிகாதானம்:*

மணமகனைச் சிவபெருமானாகப் பாவனை செய்து மணமகளின் பெற்றோர் மணமகனுடைய கால் கழுவுதல் முதலிய உபசாரமும் நடத்திக் கன்னிகாதானம் செய்யப்படும்.

> கன்யாம் கனக சம்பன்னாம்
> கனகாபரணைர் யுதாம்
> தாஸ்யாமி சம்பவே துப்யம்
> சிவலோக ஜிக்ஷயா.

பொன்னோடு கூடியவளும் பொன்னாபரணங்கள் அணிந்தவளுமாகிய இந்தக் கன்னியை சிவபெருமானாகிய உமக்கு நாம் சிவலோகம் பெறுவதற்காகத் தருகின்றோம் என்பதே இதன் கருத்தாகும்.

*கூறை உடுத்தல்:*

கூறை என்பது ஆடை, கூறை பாட்டிலும் உரையிலும் பயின்ற சொல்லாகும். தேவாரம் இச் சொல்லை எடுத்தாளுகின்றது. இம்மையே தரும் சோறும் கூறையும் ஏத்தலாம் இடர் கெடலுமாம்' என்பது சுந்தரர் பாடிய தேவாரம். இப்

பாட்டிலுள்ள கூறை என்னும் சொல்லைத் தமிழ் மக்கள் மறந்து விடவில்லை. கூறைச் சேலை என்பது முகூர்த்த வேளையில் மணமகள் உடுத்திக்கொள்ள மணமகன் வீட்டார் கொடுப்பது.

தாலி கட்டுதல்:

தாலி அணிவதென்பது பெண்களின் தற்பாது காப்புக்காக ஏற்பட்டதாகும். பெண் மணமானவள் என்பதைக் காட்டும் அடையாளம் அது தாலியை நூலில் கோத்துக்கட்டுவதே பண்டைய முறையாகும் இதனால்தான் மூன்று முடிச்சுப் போடுதல் என்ற சொல் வழக்கில் வந்தது: பொன்னாலும் மணியாலும் ஆபரணஞ்செய்து மேனியை அலங்கரிப்பது மிகப்பழமை வாய்ந்தது. கழுத்தில் கடையாக அணிந்த நூல் தாலி என்ற பெயர் பெற்றது. 'பூமடந்தை வாழப் புவிமடந்தை நூல் இழந்தாள்' என்னும் பாட்டிலே நூல் என்பது மங்கள நாணாகிய தாலியைக் குறிக்கிறது. அத்துடன் மணமகளின் கழுத்தை விட்டுத்தாலி எக்காலத்திலும் நீக்கப்படக்கூடாதென்பதும் அவர்கள் கருத்தாக இருந்தது. தாலிக் கொடியில் தாலியைக் கோத்து அணிவதும், பாதுகாப்புக்காக அதைக் கழற்றி வைப்பதும் முறையாகாது.

தாலிகட்டுதலுக்கென வேதமந்திரம் இல்லை.கீழ்க் கண்ட சுலோகம் மட்டுமே சொல்லப்படுகின்றது. தாலியை மணமகன் கையில் எடுத்துக் கட்டும் போது, ''மாங்கல்யம் தந்து நா அநேந மம ஜீவந ஹேதுநா கண்டே பத்நாமி ஸுபகே ஸஜீவ சரதஸ் சதம்'' என்ற மந்திரம் சொல்லப்படுகின்றது.

''நான் நீண்டகாலம் வாழவேண்டும் என்றும் இறைவனை வேண்டி உனக்கு இத்தாலி அணிகின்றேன். சௌபாக்கிய வதியே! நீ நூறாண்டுகள் சுமங்கலியாக, சுகமாக வாழ்ந்திருப்பாயாக'' என்பது பொருள்.

*பாணிக்கிரகணம்:*

மணமகன் தனது வலதுகைக்யைத் தாழ்த்தி மேலே வைத்துள்ள பெண்ணின் வலக்கையை(விரல் முழுவதையும் சேர்த்து) பிடித்து இருவரும் ஒன்று தான் என்பதை எடுத்துக் காட்டுதல்.

*சப்தபதி:*

பின்னர் மணமகன் தன் வலதுகையால் பெண்ணின் வலதுகையைக் கட்டைவிரலுடன் சேர்த்துப் பிடித்துக் கொண்டு மணவறையிலிருந்து எழுந்து நிற்கிறார்கள். பின்னர் அக்கினிக்கு வலது புறமாக பெண்ணின் வலது காலை, மணமகன் ஒவ்வொரு அடியாக ஏழு அடி எடுத்து வைக்க வேண்டும். இக்கிரியை மூலம் மணமக்கள் நெருங்கிய, உறவுடையவராகின்றார்கள், இவ்வாறு ஏழு அடி எடுத்து வைக்கும்போது ஏழு மந்திரங்கள் சொல்லப்படும்.

பெண்ணே உன் வாழ்வில் உணவு குறைவில்லாமல் கிடைப்பதாக; உடம்பில் வளர்ச்சி ஏற்படுவதாக; விரதங்களை அனுஷ்டிப்பாயாக; உனக்கு உடல்நலம் ஏற்படுவதாக; பசுக்கள் முதலான செல்வங்கள் பெருகுவதாக; பருவகாலங்கள் சாதகமாக இருப்பதாக; வாழ்வில் பங்கு கொள்ளவேண்டிய வேள்விகளை நிறைவேற்ற இறைவன் அருள்வதாக.

*அம்மி மிதித்தல்:*

மணமகன் மணமகளை வலக்கால் கட்டை விரலைப்பிடித்து அக்கினிக்கு வலதுபுறம் உள்ள அம்மி மீது ஏற்றிவைக்கிறான். இந்தக் காலின் மீது ஏறி நிற்பாயாக. இந்தக் கல்லைப் போல நீ மனங்கலங்காமல் உறுதியாக இருக்க வேண்டும் என்று கூறி மனோதத்துவ அடிப்படையில் அவளுக்கு மனோபலம் அளிக்கிறான். இதற்கு அம்மி அவசியமில்லை. வடமொழியில் அஸ்மானம் என்றே சொல்லப்படுகிறது. இதன் பொருள் கருங்கல். எமக்கு சுலபமாக கிடைப்பது கருங்கல்லினாலான அம்மி என்பதால் இதனைப்பயன்படுத்துகிறார்கள்


*பொரியிடுதல்:*

மணப்பெண்ணின் சகோதரன் பொரியை மணமக்களிடம் கொடுக்க அவர்கள் அக்கினியில் இடுகிறார்கள். கணவனின் நூறாண்டு ஆயுளுக்காகவும் புத்திக்கூர்மையான, ஆரோக்கியமான குழந்தைகளைப் பெறவும் ஒளிமயமான சூரிய தேவனுக்குப் பிரார்த்தனை செய்யப்படுகிறது.

*அருந்ததி தரிசனம்:*

ஏழு ரிஷிகளின் மனைவிகளில் மிகஉயர்ந்த கற்புக்கரசி அருந்ததி, அவளை நட்சத்திர உருவமாகக் காணும் மணப்பெண் அதனைப் போலத் தானும் கற்பு நெறியில் உயர்ந்து விளங்க வேண்டிக்கொள்கிறாள்.

வடக்குப் பக்கமாக அருந்ததியைக் காணலாம்.



–அருந்ததி

### ஆசிர்வதித்தல்:

இவை எல்லாம் முடிந்த பின்னர் பெரியவர்கள் அட்சதை போட்டு ஆசீர்வதிக்கிறார்கள், அட்சதையை அள்ளி இறைத்து வீணாக்குதல் கூடாது. மணமக்கள் சிரசிலேயே அட்சதை போடப்பட வேண்டும். சிரசில் விழவேண்டிய அட்சதை மற்றவர் காலில் மிதிபடக்கூடர்து. அட்சதை போடுவது ஒரு தத்துவம் மனித வாழ்க்கைக்கு மிகமுக்கியமானது அரிசி. உணவுக் கஷ்டமின்றி நல்வாழ்வு வாழ வேண்டும் என்று பெரியோர் ஆசி கூறுகின்றார்கள்.

திருமணம் இனிது முடிந்ததும் மணமகள் கணவனின் துணைவியாக, மணமகன் வீட்டு மருமகளாக மணமகன் வீட்டில் அடியெடுத்து வைக்கிறாள். இதனைக் கிருகப்பிரவேசம் என்ற நிகழ்ச்சியாகக் கொண்டாடுகிறார்கள். இதில் சொல்லப்படும் மந்திரங்களில் மனைவியைக் கணவன் தனது இல்லத்தின் தலைவியே என்று அழைத்துப் பெருமைப்படுகின்றான். திருவள்ளுவரும் மனைவியை

வாழ்க்கைத் துணைவி என்றார். 'இல்லறம் அல்லது நல்லறமில்லை' என்பது ஔவையாரின் அறநெறி வாக்காகும்.

பண்டைத் தமிழர் திருமணத்தில் ஆரியச் சடங்குகள் இருக்கவில்லை. ஓமம் வளர்ப்பது மண மக்கள் அதனை வலம் வருவது ஆகியமுறைகள் இருக்கவில்லை. திருமணத்தன்று தலைமைபூண்டு நடத்தும் பிராமணரும் அன்று இருக்கவில்லை. அக்காலத் தமிழர் திருமணத்தில் காதல் மணமே முதன்மை பெற்றிருந்தது. அதில் சில தவறுகள் நேர்ந்தபோது அறிஞர்களால் மக்கள் முன்னிலை யில் திருமண நிகழ்ச்சியாகப் பெண்ணைக் கொடுக் கும் வழக்கம் ஏற்பட்டதென்று தொல்காப்பியத் தால் அறியமுடிகிறது,

"பொய்யும் வழுவும் தோன்றியபின்னர்
ஐயர் வகுத்தனர் கரணம் என்ப"

(கரணம் - கிரியை)

அன்றைய திருமணம் பற்றி அகநானூற்றுப் பாடல் எடுத்துக் காட்டுகின்றது.

"உழுத்தம் பருப்புடன் கூட்டிச் சமைத்த செவ்விய பொங்கலொடு பெரிய சோற்றுத்திரள் ஆக்கிவைத்திருக்கின்றனர். மரத்தூண்களாலான அழகிய பந்தலின் கீழ் புதுமணல் பரப்பியுள்ளனர். மனையின் கண் விளக்கினை ஏற்றி மாலைகளைத் தொங்கவிட்டிருக்கின்றனர். தீய கோள்களின்

தொடர்பு நீக்கப் பெற்ற திங்களைக் சூற்ற மற்ற சிறந்த புகழினையுடைய உரோகிணி என்றும் விண்மீன் சேர்ந்த இருள்நீங்கிய விடியற் காலையில், முது பெண்டிர் உச்சியிற் குடத்தினையுடையரும் கையினிற் புதிய அகன்ற கலத்தினை யுடைய வருமாகி அவற்றை முறை முறையாகத்தரத்தர ஆரவாரம் மிகுந்தது. மகனைப் பெற்ற தூய மகளிர் நால்வர் கூடிநின்று "கற்பின் வழாதுபல பேறு களையும் பெற்று, நின்னை எய்திய கணவனை விரும்பிப் பேணும் விருப்பத்தை உடையையாக" என்று நீர் தெளிக்கப் பெற்ற குளிர்ந்த இதழ்க ளையுடைய பூக்களை, மிக்க கரிய கூந்தலில் நெல் லுடன் தூவி மணமக்களை வாழ்த்தினர். இச் செயல்கள் யாவும் முடிந்த பின்னர் சுற்றத்தார் "சிறந்த இல்லறக் கிழத்தியாக விழங்குவாய்" எனக் கூறிப்பெண்ணை உரியவனிடம் கொடுத் தனர். வேறு சில பாடல்களில் கண்டறியப்பட்ட கருத்துக்களின்படி பழந்தமிழர் திருமணத்தைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

திருமணத்திற்காக நன்னாள் குறித்தல். திங் களும் ரோகிணியும் சேர்ந்த காலை நேரமே பெரும்பாலும் நன்முகூர்த்தமாகக்கைக் கொள் ளப்பட்டது.

- பந்தல் அமைத்து அலங்கரித்தல்,
- மங்கள முரசம் முழங்குதல்,
- சுற்றத்தார்க்கும், ஏனையோருக்கும் உண வளித்தல்

- மணப்பெண்ணினை அலங்கரித்தல்
- முது பெண்கள் மணமகளுக்குக் குடங்களும் கலங்களும் வழங்குதல்.
- ஆண் மக்களைப் பெற்ற பெண்கள் மணமக்களை வாழ்த்துதல்.

திருமணம் இனிதே முற்றுப் பெற்று ஆணும் பெண்ணும் இல்லற வாழ்க்கை நடத்துவர். இல்லத்தை ஆட்சி செய்யும் இல்லாளைப் பெற்றுத் தமிழன் மகிழ்ந்தான். 'மனைக்கு விளக்காகியவாணுதல்' எனப் புறநானூறு மனைவியைக் குறிப்பிடும்.

அன்பு வாழ்க்கை நடத்தும் குடும்பமொன்றைக் குறுந்தொகை குறிப்பிடுகிறது.

அந்தக் குடும்பம் செல்வம் மிகுந்த குடும்பம். எனினும் கணவனுக்கு நல்ல உணவு தயாரிக்க வேண்டுமென்ற விருப்பில் தானே சமைக்கிறாள். தயிரைப் பிசைந்து புளிச் சுவையாகத் தயிர்க் குழம்பு ஆக்குகின்றாள். தயிர் முற்றிப் பாறை பட்ட தயிராய்க் கெட்டியாய் இருக்கின்றது. அவள் கைவிரல்களோ காந்தள் மலரைப்போல மென்மையுடையன. எனினும் தயிரை விரல் நோவப் பிசைந்து, அடுப்பில் வைத்துப் பாகம் செய்கிறாள் ஆடை சமையற் சுறுசுறுப்பில் இடையிலிருந்து அவிழ்கின்றது விரல்களைக் கழுவ நேரமின்றி அவிழும் ஆடையை இடுப்பில் சொருகின்றாள்.

தாளிக்கும்போது குழம்பையும் துளாவ வேண்டும். பாகம் கெட்டுவிடக் கூடாதே என்று பயந்தவளாய் குழம்பைப் பார்த்துக் கொண்டே துளாவுகின்றாள். இதனால் புகை அவள் கண்களை அரிக்கின்றது, இப்படியெல்லாம் பக்குவமாகப் பாகப் படுத்தப்பட்ட குழம்பை அவளுடைய கணவன் இனிதாக இருக்கின்றதென்று சுவைத்துச் சுவைத்து உண்கிறான். உணவின் சுவையைக் கணவன் வியந்து கூறுவதைக் கேட்டு அவள் நாணத்தினால் முகம் கவிந்து ஒரு பக்கம் ஒதுங்கி நிற்கின்றாள். அவள் முகம் அன்றலர்ந்த செந்தாமரை போல் மகிழ்ச்சியால் மலர்கின்றது,

இத்தகைய இல்லற வாழ்க்கை அக்காலத்தில் இருந்தது.

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளையுண் கண் குய்ப்புகை கமழத்
தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதன் முகனே.

சங்க காலப் பெண்ணொருத்தி தன் கணவனை நோக்கித் தனது நிலை தளராத அன்பின் உறுதியைப் புலப்படுத்துகின்றாள். "தலைவனே! இந்தப்பிறப்பு நீங்கிவேறு எத்தனை பிறப்புப் பிறந்தாலும், என் கணவன் நீயேயாகுக. நின் நெஞ்சு பொருந்திய மனைவியானே ஆகுக" இக் கூற்றிலிருந்து அக்காலப்பெண்களின் கற்புறுதியும் அன்புள்ளமும் இனிது புலனாகின்றன.

இல்வாழ்க்கை சுகவாழ்க்கையாக இருக்கவேண்டுமென்று விரும்பினால் அவ்வாழ்க்கையின் உண்மையான பண்பை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். அதற்கு இரண்டு குணங்கள் அமைய வேண்டும். ஒன்று அன்பு, மற்றொன்று தருமம் அதாவது குற்ற மற்ற வாழ்க்கை.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

அன்பானது இல்லறத்திற்கு அழகு தருகிறது. அறம் அதைப் பயன்படும் வாழ்க்கையாகச் செய்கிறது.

மனைவி எப்பேர்ப்பட்டவளாக இருக்க வேண்டும், அவள் வாழ்க்கைத் துணையாக இருக்க வேண்டும் கணவனுடைய பொருள் நிலையும் அந்தஸ்தும் உணர்ந்து அவற்றுக்கு இயைந்த முறையில் வீட்டைப்பார்த்துக் கொள்ளும் திறமை இருக்க வேண்டும்.

மனைத் தக்க மாண்புடையாள் ஆகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

எந்தக் குடும்பத்தில் மணமாகிப் புகுந்து வாழ்க்கை நடத்துகிறாளோ, அந்தக் குடும்பத்தின் பண்பாட்டுக்கும் செல்வ நிலைக்கும் தகுந்தபடி மனைவி நடந்து கொள்ள வேண்டும். பிறந்த அகத்தின் நிலைக்கும் புகுந்த வீட்டின் நிலைக்கும் ஏற்றத் தாழ்வு இருக்கும். கணவன் மனைவி இருவரும் மனம் ஒன்றிய பண்பாட்டில் வாழ்க்கை நடத்த வேண்டும்.

இல்லற வாழ்க்கை அதன் முழுப் பண்பை எப்போது அடையும்? நல்ல மக்களைப் பெற்றால் தான் அடையும் ஒருவன் அடையக் கூடிய பாக்கியங்களுக்குள்ளும் பெரும் பாக்கியமாகும். தான் பெற்ற மக்கள் அறிவடைந்து வளர்வதைப் பார்க்கும் மகிழ்ச்சி பெருமகிழ்ச்சியாகும்.

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கள்பேறு அல்ல பிற.

தாம் பெற்ற மக்களுடைய மழலைச் சொல்லைக் கேட்டு அந்த இன்பத்தை அனுபவித்த தாயும் தகப்பனும் அதை விட்டுக் குழலையும் யாழையும் கேட்கப் போகமாட்டார்கள். அவற்றின் இசையில் அந்த இன்பத்தைக் காணமாட்டார்கள்.

குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்.

மகனுக்குத் தகப்பன் என்ன செய்ய வேண்டும்? சொத்துச் சேர்த்து வைத்தால் போதுமா? மாட மாளிகை பணம் வைத்தால் போதுமா? இவற்றை விடக் கல்வியும் பண்பாடும் அதிகமாகப் பயன் படும். கல்வி கேள்வியடைந்த மக்களிடையில் மதிப்புப் பெறும்படியாக மகனை வளர்க்க வேண்டும்.

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.

புறநானூறு எடுத்துக் காட்டும் வீரத்தாயின் பாடலொன்றும் குறிப்பிடத்தக்கது. புதல்வனைப் பெற்றுப் பாதுகாப்பது எனது முதற்கடன். பின்பு அவனை படைக்கலப் பயிற்சி முதலியவற்றால் நிறைந்தவனாகச் செய்வது அவன் தந்தையின் கடமை. அவனுக்குப் படைக் கலங்களை வடித் துக் கொடுப்பது கொல்லனின் கடமை அவனுக்கு நல்லொழுக்கத்தை அளிப்பது வேந்தனின் கடமை ஒளி விளங்கும் வாள் கொண்டு கொடிய போர் களை அழித்து அங்குள்ள போர்க் களிறுகளைக் கொன்று வெற்றியுடன் திரும்புவது காளைப் பரு வத்தவனான அப் புதல்வனின் கடமையாகும்:

ஈன்று புறம் தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்நடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே,

மக்கட் பேற்றில் தாய் அடையும் மகிழ்ச்சி மிகப்பெரிது இதுஇயற்கையமைப்பு. இந்தமகிழ்ச்சி யையும் விட அதிக மகிழ்ச்சியைத் தாய் அடைவது எப்போது? தான் பெற்ற மகன் ஊரில் நல்ல பெயர் எடுக்கும் போதேயாகும்.

ஈன்றபொழுதின் பெரிதுஉவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

சான்றோன் என்றால் சால்பு உடையவன். சால்பு என்பதில் கல்வி - ஒழுக்கம் - பண்பாடு அனைத்தும் அடங்கும்.

திருமணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கை வாழ்ந்து வருவது என்னத்துக்கு?

அன்னமிட வேண்டியவர்களுக்கு அன்னமிட்டு உதவுவதற்கு இல்லறம் ஒரு சாதனம் ஆகிறது. இல்லற வாழ்க்கை ஒரு உரிமையல்ல, சமூகத்திற்கு செய்யவேண்டிய கடமைகளைச் செய்வதற்கு வேண்டிய ஒரு சாதனம்,

இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்
தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

என்றும்

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத்த வர்க்கு.

என்றும் எடுத்துக் காட்டுகிறார் வள்ளுவர்.

# தமிழ் மகளிர் வீரம்

இல்லற வாழ்வில் இன்பமான வாழ்க்கையுடன் வீர வாழ்க்கையும் வாழ்ந்திருக்கிறார்கள் தமிழ்ப் பெண்கள் தமிழ்மகளிர் அரிய பெரிய வீரத்தன்மையை நினைத்த ஒக்கூர் மாசாத்தியார் என்னும் புலமைப் பிராட்டியாரே பாராட்டியுள்ளார்.

வயது முதிர்ந்த பெண்டிர் தம் புதல்வரைப் போர்க்களத்திற்கு அனுப்புவதும், அவர்கள் போரில் உயிர் துறக்க நேர்ந்தபோது வீரமாய்ப் பொருது இறந்தார்களென்று கேட்க நேர்ந்தால், புதல்வனைப் பெற்றபோது ஏற்பட்ட மகிழ்ச்சியிலும் பார்க்கப் பெரிது மகிழ்ந்தனர்.

வயது முதிராத மாதொருத்தியின் பெருவீர நிலைமையை ஒரு புறநானூற்றுப் பாடல் எடுத்துக் காட்டுகின்றது. நேற்றைக்கு முன்னாள் நடந்த போரில் இவர் தமையன் இறந்தான் அதுவும் யானைப் படைகளின் மேல் வேல் ஓச்சிக் களத்தில் இறந்தான்.

நேற்று நடந்த போரில் இவள் கணவனே இறந்து விட்டான், இவன். எதிரி படைகளில் அணியாக வந்த பெரிய காலாட் படைகளோடு மாறுண்டு அங்கேயே இறந்து விட்டான்.

இன்றும் போர்ப்பறை கேட்டது தமையனையும் கணவனையும் பறிகொடுத்து விட்ட வீரத்தாய் உள்

ளந்தளரவில்லை வெற்றி காணும் வரை நாட்டுக்குத் தன் குடும்பம் முழுமையும் உரியது என்று நினைத் தாள்.

வீறு கொண்ட மனத்தினளாக ஒரே மகனன்றி வேறு குழந்தைகள் இல்லாதவளான இவள் அதுவும் உடுத்தக்கூடத் தெரியாத இளைஞனாக இருந்த தன் சிறுவனை அழைத்து வீரமே நிலைவரயிருந்தமையால் முதலில் வேலை அவன் கையில் கொடுத்தாள் பின் வெள்ளைத் துணியை விரித்து அவன் இடுப்பில் கட்டி அப்புறம் தலை விரித்த மயிர்க் குடுமியை எண்ணெய் தடவி வாரி இழுத்தாள் போ, போ, போர்க்களத்தை நோக்கிப் போ என்று சொல்லி அனுப்பினாள்,

இதனை ஒக்கூர் மாசாத்தியார் என்ன இருந் தாலும் இப்படிப்பட்ட கொடிய வீரவுள்ளம் கூடாது என்று எண்ணி 'கெடுக இச்சிந்தை; இவள் துணிவு கடுமையானது என இரக்கத்தால் கூறினார் பின்னர் மறக்குடிப் பெண்டிர் அப்படித்தானே நடந்து கொள்ள வேண்டும் என்று அவள் கடமையை நினைத் தவராய் "ஆ இவள் மறக்குடி மகளினாள் ஒருத்தியா தலால் இதுதகும்" என்று வியத்தெடுத்துப்பேசினார்

கெடுக சிந்தை; கடிது இவள் துணிவே;
மூதில் மகளி ராதல் தகுமே;
மேனாள் உற்ற செருவிற்கு இவள் தன்ஐ
யானைஎறிந்து களத்தொழித் தனனே;
நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்
பெருநிரை விலங்கி ஆண்டுப்பட்டனனே
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்து உடீஇப்

பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமக னல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்க என விடுமே.

இல்லறத்தினர் நல்வாழ்வு வாழவேண்டும், தான தருமங்கள் செய்யவேண்டும் ஆனால் நல்வாழ்வு என்பது உலகவியற்கையில் இல்லை அவரவர் உள்ளவியற்கையிலே தான் இருக்கின்றது உலகம் ஒன்று நாடாயிருக்கட்டும், ஒன்று காடாயிருக்கட்டும், ஒன்று மேடாயிருக்கட்டும், எந்த இடத்தில் ஆடவர் நல்லவரோ அந்த இடத்தில் அந்த உலகமும் நல்லதாயிருக்கின்றது இந்த உண்மையை ஔவைப் பிராட்டியார் அழகாகக் குறிப்பிட்டுள்ளார்

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே

சைவத் தமிழர் திருமண முறைகள் அற்புதமானவை, அர்த்தமுள்ளவை, புனிதமானவை, சத்தியமானவை, காலம் காலமாகத் தமிழர் சமுதாயத்தை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பவை, காலத்தால் அழியாது காலத்துக்கு காலம் மெருகேறி-காலத்துக்கே சாட்சியாகத் திகழும் திருமண முறைகளை அறிவியலுக்கு இசைந்ததாக இளைய தலைமுறைக்கு அர்ப்பணிப்போம்,



அச்சுவேலி தமயந்திப் பதிப்பகத்தால்
வெளியிடப்பட்ட

# புத்தொளியின் நூல்கள்

| | |
|---|---|
| படித்துப் பார் | 1949 |
| புத்தொளி மலர்ச்சி (பரிசுக் கட்டுரைகள்) | 52 |
| மொழியும் நாடும் | 60 |
| மிதிலைச்செல்வி | 68 |
| கல்விச் சுற்றுலா மலர் | 68 |
| அப்பலோ 11 | 69 |
| அப்பலோ 11, 12 | 69 |
| மலர்க தமிழீழம் | 71 |
| நாளை நமதே | 71 |
| கட்டுரைக் கதம்பம் | 72 |
| கட்டுரை மணிச[illegible] (அறிஞர்கள் எழுதிய கட்டுரைத் தொகுப்பு) | 74 |
| ஞானத் [illegible]க்கை | 74 |
| தமிழர் தலைமகன் | 77 |
| தமிழர் செல்வம் செல்வா | 77 |
| தமிழ்த் தாயின் கண்ணீர் | 77 |
| தூக்கில் பகத்சிங் | 78 |
| ஆசிரியர் திரு [illegible] | 80 |
| பாலர் பாடல்கள் | 80 |